ஹிந்து ஆன்மிக மற்றும் சேவை அறக்கட்டளையின் [HSSF] பல்வேறு வகையான வந்தனங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் ஆன்மிக மற்றும் சேவை அமைப்புகளுக்கு எங்களின் பணிவான நன்றியை கூறிக்கொள்கிறோம்.

வரும் ஆகஸ்ட் 15, 2022 அன்று நமது தேசத்தின் 75வது சுதந்திர தினம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். 75வது சுதந்திரத்தை, **'சுதந்திர திருநாள் அமுதபெரு விழா'** அதாவது **'சுதந்திரத்தின் ஆற்றல் அமுதம்'** என்ற பெயரில் மிகப்பெரிய அளவில் ஒவ்வொரு மாதமும் நாம் கொண்டாட இருக்கின்றோம் ஆகஸ்ட் 2022 முதல் ஜுலை 2023.

இப்பெருவிழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக உங்கள் அமைப்பினை பங்கேற்க பெருமையுடனும் அன்புடனும் அழைக்கின்றோம். இக்கொண்டாட்டத்தின் மூலமாக நம் அனைவருக்கும் இங்கு நடைபெறும் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் மூலம் நமது பாரம்பரியம், தேசபக்தி போன்றவற்றை பெருமையுடன் அறிய ஒரு வாய்ப்பாக இக்கொண்டாட்டம் அமையும்.

**பரம்வீர் சக்ரா** என்ற மிக உயர்ந்த இராணுவ விருது என்பது எதிரிகளிடமிருந்து நமது தேசத்தைப் பாதுகாக்க தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்த சிறந்த போர் வீரர்களுக்கு அளிக்கப்படும் உயரிய விருது ஆகும்.

அப்பேற்பட்ட போர் வீரர்களை போற்றும் வகையில் கொடுக்கப்படும் தேசிய விருது தான் பரம்வீர் சக்ரா விருது, இது போன்ற நிகழ்வுகள் மூலம் பொது மக்களை ஊக்குவிப்பதால் அவர்களின் தேசபக்தி உணர்வைத் தூண்டும். இது போன்ற தேசபக்தி உணர்வை வளர்க்க வேண்டியதன் அவசியத்தை ஹிந்து ஆன்மிக மற்றும் சேவை அறக்கட்டளை உணர்ந்துள்ளது. இந்த முயற்சியின் வாயிலாக பல இளைஞர்கள் தேசத்தை காக்க பல்வேறு இராணுவ பயிற்சி மையங்களில் தங்களை இணைத்துக்கொண்டுள்ளனர்.

இது சம்பந்தமாக அகில இந்திய ஹிந்து ஆன்மிக மற்றும் சேவை அறக்கட்டளை குழு வரும் 75வது 'சுதந்திர திருநாள் அமுதபெரு விழாவிற்கான' பின்வரும் செயல்பாடுகளை பரிந்துரைத்துள்ளது.

1. தாங்கள் வசிக்கும் உள்ளூர் பகுதிகளில் உள்ள சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆன்மிக மற்றும் சமூக அமைப்புகள், மடாலயங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கார்ப்பரேட்டுகள், வணிக / தொழில் முனைவோர் மற்றும் அனைத்து தரப்பு மக்களும் எல்லா சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினர்களையும் பங்குபெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு பங்குபெறும் அனைத்து அங்கத்தினர்களும் முக்கிய பொது இடங்களில் பரம்வீர் சக்ரா விருது பெற்றவர்களின் 21 புகைப்படங்களை தயார் செய்து வைத்து பூஜைகள் செய்ய ஏற்பாடுகள் செய்யலாம்.

2. பரம்வீர் சக்ரா விருது பெற்றவர்களின் புகைப்படங்கள் மற்றும் கையேடுகள் நிர்ணயிக்கப்பட்ட அளவில் அச்சிடுவதற்கு வங்கிகள், பெருநிறுவனங்கள், வர்த்தகர்கள், வணிக நிறுவனங்கள் போன்ற உபயதாரர்களை அணுகி அவர்கள் மூலம் அச்சிட்டுக்கொள்ளலாம். மேலும் உபயதாரர்களின் பெயர்களை புகைப்படங்களில் தவறாமல் குறிப்பிடவும்.

3. ஜுன் 2022 மாத இறுதிக்குள் 75வது 'சுதந்திர திருநாள் அமுதபெரு விழாவிற்கான' குழு அமைக்கப்பட்டு உங்கள் விரிவான திட்டத்தை ஒரு துவக்க விழாவுடன் / ஊடகங்கள் மற்றும் பத்திரிக்கைகளில் விளம்பரத்துடன் தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

4. இதனை செய்ய அருகிலுள்ள உள்ளூர் அமைப்புகள் மற்றும் அதன் கிளை அமைப்புகளையும் ஒன்றிணைத்து இந்நிகழ்ச்சியினை நடந்தலாம்.

5. இந்நிகழ்ச்சியை ஆன்மிக மற்றும் சமூக அமைப்புகள், மடாலயங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், போன்றவை ஒன்றிணைந்து நடத்தும் நிகழ்வில் சரியான இடத்தில் வந்தே மாதரம் /பாரத மாதா கி ஜெய் / ஜெய் ஹிந்த் போன்ற வாசகங்களை உச்சரிக்கவும். இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக பரம்வீர் சக்ரா சம்மந்தமாக பேச்சுப் போட்டிகள், பரம்வீர் சக்ரா விருது பெற்ற வீரர்களைப் பற்றிய கட்டுரைப் போட்டிகள், கவிதை போட்டிகள், சிறுநாடகங்கள் போன்றவற்றை நடத்தலாம்.

6. இதனை பற்றி முழு விவர அறிய HSSF சென்னை அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

7. சுதந்திரப் போராட்ட வீரர்களின் சிறு குறிப்பு அகராதி 1854 முதல் 1947 வரை இணையத்தில் கிடைக்கிறது. இதை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். இதை தவிர மற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் வரலாறு இருந்தால் ஆதாரத்துடன் எங்களுக்கு அனுப்பினால் நாங்கள் எங்கள் அகராதியில் அதை இனைப்போம்.
அகராதி இணையதளம் https://pib.gov.in/amritmahotsav/dictionary_book.aspx

8. இச்செயல் திட்டத்தை பற்றி விவரங்களை அனைத்து ஆன்மிக மற்றும் சமூக அமைப்புகள், மடாலயங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் அனுப்பி உள்ளோம். இச்செயல் திட்டத்தை எங்களின் www.hssf.in என்ற இணையதளத்தில் புதுப்பிக்கப்படும்.

9. இந்த நிகழ்வின் கொண்டாட்டத்திற்குப் பிறகு, உங்கள் சமூக ஊடகங்களில் பகிர்ந்து கொள்ளவும், புகைப்படங்கள் மற்றும் வீடியோ லிங்க் மற்றும் பங்கேற்பாளர்களின் முழு விவரங்களையும் எங்களுக்கு அனுப்பவும்.